பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.29.04.2020

நிகழும் திருவள்ளுவராண்டு ஏப்ரல் மாதம் 30ம் நாள் (30.04.2020) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ள சாதாரண கூட்டப் பொருள்கள்

| | |
|---|---|
| பொருள்.1 | பரமக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் **ஏப்ரல்** 2020ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி பொறியாளர் அவர்களின் **ஏப்ரல்** 2020ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.3 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் **ஏப்ரல்** 2020ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.4 | பரமக்குடி நகராட்சி சுகாதார அலுவலர் அவர்களின் **ஏப்ரல்** 2020ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.5 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளிலும் டெங்கு தடுப்பு பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதனை தொடர்ந்து வீடுகளில் தண்ணீர் சேமித்து வைக்கும் கலன்கள், கழிவுநீர் தேக்கங்கள், தண்ணீர் தொட்டிகள் மற்றும் கழிவுநீர் வாருகால்களில் டெங்கு, மலேரியா போன்ற நோய்களை பரப்பக்கூடிய கொசுப்புழுக்களின் உற்பத்தியை ஒழிப்பதற்கு பயன்படுத்தப் டெமிபாஸ் 50% EC மற்றும் பேசில்லஸ் துரின்சியன்சிஸ் போன்ற மருந்துகள் களப்பணி உதவியாளரின் அறிக்கையின்படி அலுவலக இருப்பில் குறைவாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>அதன்பொருட்டு பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும், நோய் தடுப்பின் முக்கியத்துவம் கருதியும் கீழ்கண்ட கொசுப்புழு ஒழிப்பு மருந்தினை கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது.<br><br>1) டெமிபாஸ் 50% EC – 300 லிட்டர்<br>2) பேசில்லஸ் துரின்சியன்சிஸ் – 300 லிட்டர்<br>மேற்கண்ட கொசுப்புழு ஒழிப்பு மருந்தினை டெங்கு, மலேரியா போன்ற நோய்களை தடுக்கும் பொருட்டு, பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும், நோய் தடுப்பின் முக்கியத்துவம் கருதியும் நகர்மன்றத்தின் பின் ஏற்பினை எதிர்நோக்கி, தனி அலுவலர் அவர்களின் 19.11.2019ம் தேதிய முன் அனுமதியின்படி, தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழக அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களான பாராமவுண்ட் பெஸ்டிசைடு லிமிடெட், சென்னை மற்றும் AJAY BIO- TECH (INDIA) Ltd, PUNE போன்ற நிறுவனங்களிடமிருந்து ரூ.6,00,000 உத்தேச செலவினத்தில் நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு |

| | |
|---|---|
| | <u>அலுவலகக் குறிப்பு–</u><br><br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2) தனி அலுவலர் அவர்களின் 19.11.2019ம் தேதிய முன் அனுமதியின்படி, தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழக அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களான பாராமவுண்ட் பெஸ்டிசைடு லிமிடெட், சென்னை மற்றும் AJAY BIO- TECH (INDIA) Ltd, PUNE போன்ற நிறுவனங்களிடமிருந்து ரூ.6,00,000 உத்தேச செலவினத்தில் நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். |
| பொருள்.6 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், இராமநாதபுரம் மாவட்டம் அவர்களின், கடிதம் எண்.DEE/TNPCB/RMD/Covid 19/ULB/2020-2021, நாள் 25.04.2020ல் கொரோனா தொற்றுள்ள வீடுகளில் உருவாகும் முகக்கவசம் மற்றும் கையுறைகளை மருத்துவக்கழிவுகள் மேலாண்மை விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, கையாள தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் விருதுநகர் மாவட்டத்தில் செயல்பட்டுவரும் ராம்கி எனர்ஜி அன்ட் என்விரான்மெண்ட் என்ற நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு கழிவுகளைக் கையாள தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>மேற்கண்ட நிறுவனத்தின் விலைப்புள்ளியில் 15கிலோவிற்குள் உருவாகும் மேற்படி கழிவுகளை சேகரித்து இறுதியாக்கம் செய்திட மாதம் ஒன்றிற்கு ரூ.20000/– செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பரமக்குடி நகர்ப்பகுதியில் கொரோனா தொற்று பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளில் உருவாகும் கையுறை மற்றும் முகக்கவசங்களை மேற்கண்ட நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு அப்புறப்படுத்துவதற்கும், அதற்கான செலவுத்தொகை மாதம் ஒன்றிற்கு ரூ.20000/– செலுத்துவதற்கும் நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br><u>அலுவலகக் குறிப்பு–</u><br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) ராம்கி எனர்ஜி அன்ட் என்விரான்மெண்ட், விருதுநகர் என்ற நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கும், அதற்கான செலவுத்தொகை மாதம் ஒன்றிற்கு ரூ.20000/– செலுத்துவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.7 | பரமக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 20 மூன்று சக்கர வாகனங்கள், 60 காம்பாக்டர் பின்கள் மற்றும் 57 பேட்டரி வாகனங்கள் போன்றவை குப்பைகள் பிரித்து வாங்கும் பணியில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவற்றில் 57 பேட்டரி வாகனங்களில் 30 பேட்டரி வாகனங்கள் பழுதடைந்து பயன்பாட்டில் இல்லாமல் உள்ளது. மேற்கண்ட வாகனங்களை கொரோனா தொற்று காரணமாக சம்மந்தப்பட்ட அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலம் பழுது பணிகள் மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது.<br>மேலும் 40 காம்பாக்டர் பின்கள் சக்கரம் உடைந்தும், பக்கவாட்டு தூக்கு கம்பி உடைந்தும், காம்பாக்டர் பின்கள் சேதமடைந்தும் உள்ளது. இதனால் குப்பைகளை அப்புறப்படுத்துவதில் தேக்க நிலை உள்ளது. மேலும் 20 மூன்று சக்கர வாகனங்கள் முற்றிலும் சேதமடைந்து உள்ளதால் குப்பைகளை அகற்றுவதில் தேக்க நிலை உள்ளது.<br>எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், திடக்கழிவு மேலாண்மையின் முக்கியத்துவம் கருதியும், காம்பாக்டர் பின்கள் மற்றும் மூன்று சக்கர வாகனங்களுக்கு 2020–21ம் ஆண்டிற்கு ரூ.5.00லட்சம் உத்தேச செலவினத்தில் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி இனவாரியான பழுது பணிகள் மேற்கொள்வதற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு. |

**<u>அலுவலகக் குறிப்பு–</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) காம்பாக்டர் பின்கள் மற்றும் மூன்று சக்கர வாகனங்களுக்கு 2020–21ம் ஆண்டிற்கு ரூ.5.00லட்சம் உத்தேச செலவினத்தில் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி இனவாரியான பழுது பணிகள் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

3) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள்.8

பரமக்குடி நகர் பகுதிகளில் கொரோனா நோய் தொற்று பரவல் காரணமாக 10 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதால், அனைத்து வார்டு பகுதிகளும் **Containment zone** தடை செய்யப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டாதல், வீடுகள் தோறும் குப்பைகளை தரம் பிரித்து வாங்கும் பணிகள் மேற்கொள்ள முடியாமல் மொத்தமாக சேகரிக்கப்பட்டு நகராட்சி கலவை உரக்கிடங்கில் கடந்த $2^{1/2}$ மாதங்களாக கொட்டப்பட்டு வருகிறது. மேலும் கொரோனா நோய் தொற்றின் காரணமாக மூன்று நுண்ம உரக்கூட மையங்களும் செயல்படுத்த முடிவில்லை. மேலும் நகராட்சி கலவை உரக்கிடங்கில் **Bio Mining** மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டு $1^{1/2}$ வருட காலங்களாக பணிகள் மேற்கொள்ளப்படாமல் உள்ளதால், கலவை உரக்கிடங்கு முழுவதும் குப்பைகள் நிரம்பி குப்பைகள் கொட்ட இடமில்லாமல் உள்ளது.

எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி கலவை உரக்கிடங்கில் குவிந்துள்ள குப்பைகளை Hitachi வாகனம் மூலம் ரூ.3.00லட்சம் உத்தேச செலவினத்தில் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி குப்பைகளை அப்புறப்படுத்தி சமப்படுத்திடும் பணிகள் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக் குறிப்பு–</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) Hitachi வாகனம் மூலம் ரூ.3.00லட்சம் உத்தேச செலவினத்தில் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி குப்பைகளை அப்புறப்படுத்தி சமப்படுத்திடும் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள்.9

பரமக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 32 பேட்டரி ஆப்ரேட்டர் வாகனங்களும், இரண்டாவது கட்டமாக 19 பேட்டரி ஆப்ரேட்டர் வாகனங்களும் கொள்முதல் செய்யப்பட்டு திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்கண்ட 32 பேட்டரி ஆப்ரேட்டர் வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு ஒரு வருடம் ஆகி விட்டபடியால் பெரும்பாலான வாகனங்கள் பழுதுகள் ஏற்பட்டு வாகனங்களை இயக்க முடியாமல் உள்ளது. இதனால் குப்பைகளை தரம் பிரித்து வாங்குவதில் தொய்வு ஏற்பட்டுள்ளது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், திடக்கழிவு மேலாண்மையின் முக்கியத்துவம் கருதியும் தகுதி வாய்ந்த நிறுவனங்கள் மூலம் கீழ்க்கண்ட இனவாரியான பழுதுப்பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

| வ.எண் | இனவாரியான பழுதுப்பணிகள் விபரம் |
|---|---|
| 1. | Accelarator Change |
| 2. | Head light, Indicator (Left side switch) Change |
| 3. | Horn switch (Right side) Change |
| 4. | Speeds Meter change |
| 5. | Head light change |
| 6. | Horn Change |
| 7. | Fork Bearing change |
| 8. | Shock Absorber 'T' with not change |
| 9. | Shock Absorber change |
| 10. | Mudguard Change |

| | |
|---|---|
| 11. | Front Tyre with Tube Change |
| 12. | Front Axle with out change |
| 13. | Front Indicator change |
| 14. | Indicator Relay change |
| 15. | Wiring kit change |
| 16. | Control Box change |
| 17. | Control Box Service |
| 18. | DC Convertor work |
| 19. | Revorse horn work |
| 20. | Revorse Horn relay work |
| 21. | Motoer work |
| 22. | Back type with tube change |
| 23. | Back wheel Axle work |
| 24. | Brake shoe change |
| 25. | Back wheel bold and Nut change |
| 26. | Back wheel bearing work |
| 27. | Rim change |
| 28. | Differential Gear work |
| 29. | Back indicator set change |
| 30. | Break Rod Bold nut change |
| 31. | Handle bar change |
| 32. | Hand brake cable change |
| 33. | Driver Brake cable change |
| 34. | MCB Change |
| 35. | Charger New Change |
| 36. | Charger service |
| 37. | Wire connector change |
| 38. | Bottery 100AH change |
| 39. | Battery 40 AH Change |
| 40. | Battery Terminal change |
| 41. | Battery wire change |
| 42. | Kamini with bush change |
| 43. | Tincker work |
| 44. | Painting work |
| 45. | Motor service |

மேற்கண்ட இனவாரியான பழுதுப்பணிகளை ரூ.5.00 லட்சம் உத்தேச செலவினத்தில் தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக் குறிப்பு–**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) இனவாரியான பழுதுப்பணிகளை ரூ.5.00 லட்சம் உத்தேச செலவினத்தில் தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3) செலவினத்தை பொது நிதி அல்லது திடக்கழிவு மேலாண்மை பயணாளர் கட்டணத்திலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| பொருள்.10 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.7 எமனேஸ்வரம் பெருமாள் கோவில் பின்புறம் உள்ள சாலையில் ரூபாய் 5.00 இலட்சம் மதிப்பீட்டில் செய்ய இந்நகர்மன்றத் தீர்மானம் எண். நாள். அனுமதி அளிக்கப்பட்டதின் பேரில் 08.04.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு |

ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.சந்திரன், ஒப்பந்ததாரர் | 0.06% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு |
| 2 | திரு.எம்.சங்கர், ஒப்பந்ததாரர் | 1.62% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு –

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ்.சந்திரன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.06% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

பொருள்.11

இந்நகராட்சிக்குட்பட்ட அண்ணா பேரூந்து நிலையத்தில் உள்ள இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் மராமத்துப் பணிகளான தட்டோடு பதித்தல், பூச்சு வேலை, செட் அமைத்தல், சுற்றுச்சுவர் அமைத்தல் மற்றும் வர்ணம் பூசுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள ரூ. 6.00 உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு –</u>

மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள்.12

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 19 முதல் 36 வரை உள்ள வார்டுகளில் உள்ள சிறுமின் விசை பம்புகளை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் செய்ய இந்நகர்மன்றம் தீர்மான எண். நாள் நிர்வாக அனுமதி அளித்ததின் பேரில் 29.04.2020ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் விபரம்** | **ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு தொகையைவிட கூடுதல் / குறைவு** |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.சந்திரன், ஒப்பந்ததாரர் | 1.65% மதிப்பீட்டு ரேட்டை விட கூடுதல் |
| 2. | திரு.எம்.சங்கர்ஒப்பந்ததாரர் | 0.01% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு |

<u>அலுவலகக்குறிப்பு –</u>

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எம்.சங்கர், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.01 % குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

பொருள்.13

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளிலும் உள்ள சிறுமின்விசைப் பம்புகளுக்கரிய மோட்டார்கள் பொதுமக்களின் அதிகமான உபயோகத்தின் காரணமாக அடிக்கடி பழுதடைந்து விடுகிறது. மேற்படி சிறுமின்விசைப்பம்பு மோட்டார்களை பழுது நீக்க முடியாத பட்சத்தில் அதற்கு புதிதாக மோட்டார்கள் வாங்கவும், நீரேற்று நிலையங்களில் உள்ள ஆழ்துளை கிணற்றில் நீரேற்றும் செய்ய புதிய மோட்டார்கள் வாங்கவும் தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.10.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு –</u>

மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள்.14

இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள தலைமை நீரேற்ற நிலையங்கள் மற்றும் இதர நீரேற்று நிலையங்களில் உள்ள மின்மோட்டார்களில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகளை சீர் செய்யவும் மற்றும் மின்சாதனங்களில் ஏற்படும் பழுதுகளை சீர் செய்யவும் ரூ. 5.00 லட்சம் மதிப்பீட்டில் செய்ய இந்நகர்மன்றம் தீர்மான எண். நாள் நிர்வாக அனுமதி அளித்ததின் பேரில் 29.04.2020ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் விபரம்** | **ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு தொகையைவிட கூடுதல் / குறைவு** |
|---|---|---|
| 1 | திரு.பி.கோவிந்தன்,<br>ஒப்பந்ததாரர் | 0.06% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு |
| 2. | திரு.எம்.சங்கர்<br>ஒப்பந்ததாரர் | 1.17% மதிப்பீட்டு ரேட்டை விட கூடுதல் |

<u>அலுவலகக்குறிப்பு –</u>

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.பி.கோவிந்தன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.06 % குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

தனிஅலுவலர்
பரமக்குடி நகராட்சி